**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 307** **நாள் : 20.10.2022**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் பொதுமக்களிடமிருந்து கட்டணம் வசூலித்த 2 நபர்கள் மீது காவல்துறையில் புகார் அளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 943 இடங்களில் 7,590 இருக்கை வசதிகள் கொண்ட பொதுக்கழிப்பிடங்கள் உள்ளன. இந்தக் கழிப்பிடங்கள் பொதுமக்கள் கட்டணமில்லாமல் பயன்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறது.

மேலும், சென்னையில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், ரூ.36 கோடி மதிப்பில் 366 இடங்களில் சிதிலம் அடைந்த மற்றும் பயன்படுத்த உகந்த நிலையில் இல்லாத கழிப்பிடங்களை மறுசீரமைக்கும் பணிகளும், பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் புதிய பொதுக்கழிப்பிடங்கள் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணியின் கீழ் மேற்குறிப்பிட்ட 366 இடங்களில் 860 இருக்கைகள் கொண்ட கழிப்பிடங்களும், 620 சிறுநீர் கழிப்பிடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாநகராட்சியின் சார்பில் அமைக்கப்படும் பொதுக்கழிப்பிடங்களில் பொதுமக்களுக்கு எவ்வித கட்டணமுமின்றி சேவையாக பயன்பாட்டில் உள்ளது. மாநகராட்சி பொதுக்கழிப்பிடங்களில் கட்டணமில்லா பொதுக்கழிப்பிடம் என பெயர் பலகைகளும் வைக்கப்பட்டுள்ளன. இதனை மீறி பொதுமக்களிடம் கட்டணம் வசூலிக்கும் நபர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதில் ஒரு சில இடங்களில் பொதுமக்களிடம் பணம் வசூலிப்பதாக புகார்கள் பெறப்பட்டன. அதனடிப்படையில் 03.10.2022 அன்று இராயபுரம் மண்டலம், வார்டு-61க்குட்பட்ட எழும்பூர் இரயில் நிலையம் அருகில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் கட்டணம் வசூலித்த 2 நபர்கள் மீது காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டு நடவடிகக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி பொதுக்கழிப்பிடங்களில் பொதுமக்களிடம் கட்டணம் வசூலித்தால் சம்பந்தப்பட்ட நபர்களின் மீது காவல்துறையில் புகார் பதியப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**